# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2104/31 - 2019 ජනවාරි මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.01.03

*2104/31 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 13/2017*

**(81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டம்**

*(81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் 63 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 6 ஆம் மற்றும் 10 ஆம் பிரிவுகளின்கீழ் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்.*

கொழும்பு,
*2018, யூலை 20.*

ஒழுங்குவிதிகள்

*1.* காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான, *1942* யூலை *31* ஆந் திகதிய *8979* ஆந் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட *1942* ஆம் ஆண்டின் கடன் இணக்க ஒழுங்குவிதிகள் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன:

*(1)* அதன் *3* ஆம் ஒழுங்குவிதிக்குப் பதிலாக பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன்மூலம்:

“*3. (1)* சபையின் அல்லது கிளைச் சபையொன்றின் கூட்டமொன்றுக்கு வருகைதரும் சபையின் அல்லது கிளைச்சபையொன்றின் ஒவ்வொரு உறுப்பினருக்கும், ஒவ்வோர் அமர்வு தொடர்பில் மூவாயிரம் ரூபாக் கட்டணமொன்று செலுத்தப்படுதல் வேண்டும்.

*(2)* சபையின் கூட்டமொன்றுக்கு வருகை தரும் சபையொன்றின் தவிசாளருக்கு ஒவ்வோர் அமர்வு தொடர்பில் ஐயாயிரம் ரூபாக் கட்டணமொன்று செலுத்தப்படுதல் வேண்டும்.”;

*(2)* அதன் *4* ஆம் ஒழுங்குவிதியில் -

(அ) அவ்வொழுங்குவிதியின் *(1)* ஆம் பந்தியில் (ii) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன்மூலம்:

“(ii) ஓர் உறுப்பினர் கூட்டமொன்றுக்கு வருகை தர மோட்டார் வாகனமொன்றைப் பயன்படுத்துமிடத்து, கூட்டமொன்றிற்கு ஆயிரம் ரூபாவும் தவிசாளரின் விடயத்தில் கூட்டமொன்றிற்கு இரண்டாயிரம் ரூபாவும்.”;

*2.* இவ்வொழுங்குவிதிகள், *2017* ஆந் ஆண்டு நவெம்பர் மாதம் *1* ஆந் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

*01-365*


1A - G 29188 — 18 (2019/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.